## கவிஞரின் கொலை முயற்சி

என்றுபல பேசுவதும் என்னுயிரைப் புண்செயவே,
கொன்றுவிட எண்ணிக் குரங்கின்மேல், வீசினேன்
கைவாளை யாங்கே; கனவோ? நனவுகொலோ?
தெய்வவலியோ? சிறு குரங்(கு) என் வாளுக்குத்
தப்பி முகஞ்சுளித்துத் தாவி யொளித்திடவும்
ஒப்பிலா மாயத்து ஒரு குயிலும் தான் மறையச்
சோலைப் பறவை தொகை தொகையாய்த் தாமொலிக்க
மேலைச் செயலறியா வெள்ளறிவிற் பேதையேன்
தட்டுத் தடுமாறிச் சார்பனைத்தும் தேடியுமே
குட்டிப் பிசாசுக் குயிலையெங்கும் காணவில்லை

(71 - 80)

**கருத்து :** பலவாறாகப் பேசிய குரங்கின் காதல் மொழிகள் கவிஞரின் மனதை மிகவும் புண்படுத்தியது. எனவே அந்தக் குரங்கினைக் கொல்லவேண்டும் என்ற எண்ணத்துடன் கையில் உள்ள வாளினை குரங்கின்மேல் வீசினார். ஆனால் இது கனவா? நனவா? அல்லது தெய்வச் செயலோ? அந்தச் சிறிய குரங்கு என்வாள் வீச்சிற்குத் தப்பி முகம் சுளித்தவாறு ஓடி மறைந்தது. அதே வேளையில் அந்த மாயக் குயிலும் மறைந்தது.

அடுத்து என்ன செய்வதென்றுத் தெரியாது தெளிவற்ற அறிவோடு தட்டுத்தடுமாறி அக்குயில் செல்லும் இடங்களில் எல்லாம் தேடியும் அந்தக் குட்டிப்பேய் போன்ற குயில் எங்கும் கிடைக்கவில்லை.

கவிஞன் வாளை வீசியும் குரங்கு தப்பியதாகவும் அவ்வாறே குயிலையும் காணமுடியவில்லை என்பதும் கோபம் ஏற்படுகிறபோது பதற்றத்தினால் நாம் செய்யும் செயலைச் சரியாகச் செய்ய முடியாமல் போகும் என்பதற்கு அவர் வீசிய வாள் வீச்சில் குரங்கு தப்பியதே

சான்று. மேலும் இப்பாடலை ஒரு பொருளின் மீது ஆசை வைத்தோமானால் அதை அடையும்வரை நம் ஆசை அடங்காது அதனைத் தேடி அலையும். அவ்வாறு தான் கவிஞரும் குயிலினைத் தேடியலைவதாக அமைந்த நிகழ்வும் உள்ளது.

## 6. இருளும் ஒளியும்

வானநடுவிலே மாட்சியுற ஞாயிறுதான்
மோனவொளி சூழ்ந்திடவும் மொய்ம்பிற் கொலுவிருந்தான்
மெய்யெல்லாம் சோர்வு, விழியில் மயக்கமுற
உய்யும் வழியுணரா(து) உள்ளம் பதைபதைக்க
நாணும் துயரும் நலிவுறுத்த, நான் மீண்டும்
பேணுமனை வந்தேன், பிரக்கினை போய் வீழ்ந்து
விட்டேன் (1- 6)

**கருத்து :** உடலும் உள்ளமும் தளர்ந்தார் கவிஞர் வானின் நடுவில் அழகுபெற பெருமையுடன் சூரியன் தன் ஒளியினை எங்கும் பரப்பியபடி கொலு வீற்றிருந்தான். அவ்வேளையில் உடலில் சோர்வும் விழியில் மயக்கமும் கொண்டு தான் கரைசேர ஒரு வழியும் இல்லாதது போன்ற நிலையில் உள்ளம் பதைத்திட மற்றொருபுறம் வெட்கமும் துன்பமும் மனம் துவளும்படிச் செய்ய மீண்டும் தன் இல்லத்தை அடைந்து தன் நினைவிழந்து வீழ்ந்து கிடந்தார் கவிஞர்.

'நாணமும் துயரும் நலிவுறுத்த' என்றதன் காரணம் ஒரு சிறுகுயிலின் மீது கொண்ட காதலுக்காக மற்றொரு உயிரைக் கொல்லும் அளவிற்கு தன்னிலையில் இறங்கிப் போய்விட்டத் தன்நிலையை எண்ணி வெட்கமும் மற்றொரு புறம் தன் காதல் குயில் என்றெண்ணிய குயிலி தன்னை ஏமாற்றியது போல் குரங்குடன் பழகுவதனை

எண்ணி துயரும் கொண்டு மனம் வாடினார் என்பதுவே செய்தி.

## நண்பரின் வினாக்களும் பதிலும்

மாலையிலே மூர்ச்சை நிலை மாறித் தெளிவடைந்தேன்;
நாலுபுறமும் எனை நண்பர்வந்து சூழ்ந்து நின்றார்;
"ஏனடா மூர்ச்சையுற்றாய்? எங்கு சென்றாய்? ஏது செய்தாய்?
வானம் வெளிறுமுன்னே வைகறையிலே தனித்துச்
சென்றனை என்கின்றார் அச்செய்தியென்னே? ஊணின்றி
நின்றதென்னே?" என்று தெரித்துவிட்டார் கேள்விகளை; (7 - 12)

**கருத்து :** மாலையில் தன் நிலைமாறி தெளிவடைந்து எழுந்தார். நான்கு புறமும் நண்பர்கள் சூழ்ந்து நின்று ஏன் நீ மயக்கமடைந்தாய்? எங்கு சென்றாய்? என்ன செய்தாய்? ஏன் பொழுது புலரும் முன் நீ வைகறை வேளையில் தனியாகச் சென்றாய்? என்ன செய்தி? ஏன் உண்ணவும் மறுக்கின்றாய்? என்று கேள்விகளை அடுக்கினார்கள்.

இன்னார்க்(கு) இது சொல்வ(து) என்று தெரியாமல்,
'என்னால் பலவுரைத்தல் இப்பொழுது கூடாதாம்,
நாளை வருவீரேல் நடந்ததெல்லாம் சொல்வேன் இவ்
வேளை எனைத் தனியே விட்டகல்வீர்" என்றுரைத்தேன்
நண்பரெல்லாம் சென்றுவிட்டார். நைந்துநின்ற தாயாதாம்
உண்பதற்குப் பண்டம் உதவி, நல்ல பால் கொணர்ந்தார்
சற்று விடாய் தீர்ந்து தனியே படுத்திருந்தேன்
முற்றும் மறந்து முழுத்துயலில் ஆழ்ந்துவிட்டேன் (13-20)

**கருத்து :** யாருக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல், 'என்னால் இப்போது ஏதும் கூற முடியாது. நாளை நீங்கள் வரும்போது உங்களுக்கு நடந்ததைச்

சொல்கின்றேன். இப்போது என்னைத் தனியே விட்டுச் செல்லுங்கள்' என்று கூறியதைக் கேட்டு நண்பர்கள் சென்று விட்டார்கள். வருத்தமுற்று ஒருபுறம் நின்றிருந்த அன்னை உண்பதற்கு உணவும் பாலும் கொண்டு வந்து கொடுத்தார். கொஞ்சம் உண்டு பசியாற்றி தனியே படுத்திருந்து சிறிது நேரத்தில் நன்கு உறங்கிவிட்டார்.

## அதீத துன்பத்தின் விளைவு

**பண்டு நடந்ததனைப் பாடுகின்ற இப்பொழுது**
**மண்டு துயரெனது மார்பையெலாங் கவ்வுதே!**
**ஓடித் தவறி உடையவனாம் சொற்களெல்லாம்;**
**கூடி மதியிற் குவிந்திடுமாம் செய்தியெலாம்; (21 - 24)**

**கருத்து :** என்றோ ஒருநாள் நடந்த நிகழ்வை இன்றுப் பாடும்போதும் அதீதமான துயரம் என் மனதில் நிறைகிறது. சொற்கள் நடுங்குகிறது. எல்லாச் செய்திகளும் நம் மூளையில் பதிந்து விடுகின்றது.

## கதை கூறுபவர் தம்மில் சிலர் இயல்பு

**நாசக் கதையை நடுவே நிறுத்திவிட்டுப்**
**பேசும் இடைப்பொருளின் பின்னே மதிபோக்கிக்**
**கற்பனையும் வர்ணனையும் காட்டி கதைவளர்க்கும்**
**விற்பனர்தம் செய்கை விதமும் தெரிகிலன்யான்;**
**மேலைக் கதையுரைக்க வெள்கிக் குலையுமனம்**
**காலைக் கதிரழகின் கற்பனைகள் பாடுகிறேன் (25 - 30)**

**கருத்து :** கதை கூற முனைபவர்கள் தாம் சொல்ல வந்த கதையினை பாதியில் நிறுத்தி இடையில் தன் அறிவுக் கெட்டியபடியான கற்பைனைகளையும் வர்ணனைகளையும் கூட்டிக் கதையை வளர்க்கும் சில ஏமாற்றுக்காரர்களைப் போன்று செயல் செய்யத் தெரியாது எனக்கு. இதற்கு மேலும் தொடர்ந்து அந்தக் குயிலின் கதையைச் சொல்ல வெட்கப்படுகிறது என்

மனம். எனவே இனி காலைக் கதிரழகினை கற்பனையோடு பாடுகின்றேன்.

## காலைக்கதிரின் அழகு

தங்கம் உருக்கித் தழல் குறைத்துத் தேனாக்கி,
எங்கும் பரப்பியதோர் இங்கிதமோ? வான்வெளியைச்
சோதி கவர்ந்து சுடர்மயமாம் விந்தையினை
ஓதிப் புகழ்வார் உவமையொன்று காண்பாரோ?
கண்ணை யினி(து) என்றுரைப்பார் கண்ணுக்குக்
கண்ணாகி
விண்ணை அளக்குமொளி மேம்படுமோர்
இன்பமன்றோ? (31 - 36)

**கருத்து :** காலை இளம் சூரியன் எழுந்து வரும் அழகு தங்கத்தை உருக்கி விட்டதுபோன்றும் சூட்டினைக் குறைக்கும் இனிய தேன்போன்ற நிறத்திலும், எங்கும் இதமான சூழலைப் பரப்பியது. வான்வெளியெங்கும் சூரியனின் ஒளி எழுந்து ஒளிவிட்டு மின்னும அழகினைப் புகழ்ந்து பேசுபவர்கள் ஓர் உவமையினைச் சொல் வார்கள். கண் இனிமையானது என்பார்கள். உண்மையில் கண்ணுக்குக் கண்ணாக நின்று ஒளிதரும் உலகின் ஒரே கண்ணான சூரியனின் ஒளியே உண்மையான உயர்வான இன்பம் ஆகும்.

## இறைவனின் தன்மைகள்

மூலத் தனிப்பொருளை மோனத்தே சிந்தை செய்யும்
மேலவரும் அஃதோர் விரியுமொளி என்பாரேல்,
நல்லொளிக்கு வேறு பொருள் ஞாலமிசை ஒப்புளதோ
புல்லை நகையுறுத்திப் பூவை வியப்பாக்கி
மண்ணைத் தெளிவாக்கி, நீரில் மலர்ச்சிதந்து
விண்ணை வெளியாக்கி, விந்தைசெயும் சோதியினைக்

காலைப் பொழுதினிலே கண் விழித்து நான் தொழுதேன்;
நாலு புறத்தும் உயிர் நாதங்கள் ஓங்கிடவும்
இன்பக் களியில் இயங்கும் புவிகண்டேன்
துன்பக் கதையின் தொடருரைப்பேன், கேளீரோ!

(37 - 45)

**கருத்து** : உலகின் மூலப்பொருளான தனித்தன்மை பொருந்தியவளான இறைவனை எண்ணித் தனித்து தவம் செய்யும் சான்றோர்கள் அவ்விறைவனின் அருளினையும் ஒளி என்றே கூறுவார்கள். சூரிய ஒளியும் தெய்வத்தான் கிட்டிய ஞான ஒளியும் ஒரு நிலையில் ஒப்பிட்டுப் பார்த்தால் இவர்களுக்கு இணையாக இவ்வுலகில் ஏதுமில்லை. இறைவனே சோதிவடிவானவன் என்பதே ஆகும்.

மேலும் புல்லுக்கென்று தனிப்பண்பினையும் பூக்களுக்கு வியப்பான தோற்றத்தையும் தந்து மண்ணினையும் தூய்மையாக்கி, இவ்வுலக உயிர்கள் இயங்க அவசியமானது நீர். ஆகவே நீரால் உலகத்தினையே மலரச் செய்து விண்ணில் ஏதுமற்ற நிலையில் எல்லாம் இருப்பதுபோல் அமைத்து மிகப்பெரும் விந்தைகளைச் செய்யும் அற்புதமான சோதிவடிவான இறைவனின் பிம்பமாக உள்ள சூரியனை காலைப் பொழுதினில் கண் விழித்தவுடன் கவிஞர் தொழுதார்.

எல்லாத் திசைகளிலும் உயிர்களின் ஒலிகள் ஓங்கி ஒலிக்கும் படியும் உலகம் முழுவதும் இன்பமாக இருப்பது கண்டேன். நான் இந்தத் துன்பக் கதையினைத் தொடர்ந்து சொல்வேன் கேட்பீராக.

அதாவது துன்பமுற்றிருப்பவர்களுக்குத் தன்னைத் தவிர இந்த உலகம் முழுவதும் இன்பமாக இருப்பது போன்றே தோன்றும். இந்த மன உணர்வின் வெளிப்பாடு பாரதியிடமும் தெரிகிறது.

## 7. குயிலும் மாடும்

காலைத் துயிலெழுந்து காலிரண்டும் முன்போலே
சோலைக்(கு) இழுத்திட சொந்தஉணர் வில்லாமே
சோலையினில் வந்துநின்று சுற்றுமுற்றும் தேடினேன்.
கோலப் பறவைகளின் கூட்டமெல்லாம் காணவில்லை
மூலையிலோர் மாமரத்தின் மோட்டுக் கிளையினிலே
நீலக் குயிலிருந்து நீண்டகதை சொல்லுவதும்
கீழே யிருந்தோர் கிழக்காளை மா(டு) அதனை
ஆழ மதியுடனே ஆவலுறக் கேட்பதுவும்
கண்டேன் வெகுண்டேன் கலக்கமுற்றேன் நெஞ்சிலனல்
கொண்டேன் குமைந்தேன் குமுறினேன் மெய்
வெயர்த்தேன்
கொல்லவாள் வீசல் குறித்தேன்; இப்பொய்ப் பறவை
சொல்லுமொழி கேட்டதன்பின் கொல்லுதலே
சூழ்ச்சியென
முன்போல் மறைந்து நின்றேன்; (1 - 13)

### நீண்டும் ஒரு காதல் மயக்கம்

**கருத்து :** காலை உறக்கம் கலைந்து எழுந்தவுடனேயே முன்பு நடந்த நிகழ்வுபோல தன்னை யறியாமலேயே தன் கால்கள் தாமாகச் சோலைக்குச் சென்றிட, அங்கு அந்தக் குயிலினை எல்லாக் கிளைகளிலும் தேடுகின்றார். அழகிய பறவைகளின் கூட்டம் எதனையும் காணவில்லை. அப்போது மூலையில் உள்ள ஒரு மாமரத்தின் உயர்ந்த கிளையில் அமர்ந்தபடி அந்த நீலக்குயில் நீண்ட கதை யொன்றினைச் சொல்ல, அங்கே அருகே கீழே இருந்தபடி ஒரு வயதான காளை மாடு ஒன்று அந்தக் கதைகளை ஆழ்ந்த கவனமுடனும் ஆவலுடனும் கேட்பதனைக் கண்டு மனம் கலங்கிக் கோபம் கொண்டதனால் மனத்தில் அனல்பரவி உடல் எங்கும் அந்த நெருப்புப் புகைய

ஆரம்பித்து எனக்கு வியர்க்க ஆரம்பித்தது. மீண்டும், வாளால் கொல்லக் கருதினேன். ஆனால் உடன் அவைபேசும் உரையைக் கேட்டபின் கொல்ல எண்ணி முன்போலவே மறைந்து நின்று கேட்க ஆரம்பித்தேன்.

## காளையிடம் குயில் உரைத்த காதல் மொழிகள்

மோகப் பழங்கதையைப்
பொன்போல் குரலும் புதுமின் போல் வார்த்தைகளும்
கொண்டு குயிலாங்கே கூறுவதாம் "நந்தியே!
பெண்டிர் மனத்தைப் பிடித்திழுக்கும் காந்தமே!
காமனே மாடாகக் காட்சி தரும் மூர்த்தியே!
பூமியிலே மாடுபோல் பொற்புடைய சாதியுண்டோ?
மானிடரும் தம்முள் வலிமிகுந்த மைந்தர்தமை
மேனியுறும் காளையென்று மேம்பா டுறப் புகழ்வார்;
காளையர்தம் முள்ளே கனம்மிகுந்தீர் ஆரியரே!
நீளமுகமும் நிமிர்ந்திருக்கும் கொம்புகளும்
பஞ்சுப் பொதிபோல் படர்ந்த திருவடியும்,
மிஞ்சுப் புறச்சுமையும் வீரத் திருவாலும்,
வானத்(து) இடிபோல 'மா'வென்(று) உறுமுவதும்
ஈனப்பறவை முதுகின்மிசை ஏறிவிட்டால்
வாலைக் குழைத்து வளைத்தடிக்கும் நேர்மையும் பல்
காலம்நான் கண்டு கடுமோகம் எய்திவிட்டேன் (13 - 28)

**கருத்து :** தன்னுடைய அழகிய பழங்கதையை மற்றவர்களைக் கவரும் குரலோடும் நல்ல மின்னல்போன்ற வார்த்தைகளையும் கொண்டு குயில் பேசலாயிற்று.

'நந்தி என்று பெயர் பெற்ற காளையே! நீ பெண்களின் மனதை எளிதில் கவர்ந்துவிடும் தன்மையானவன். உன் அழகைக் காணும் போது அந்த மன்மதனே உன்னுருவில் வந்ததாகவே எண்ணுகின்றேன். இந்த பூமியில் மாடுபோல்

பெருமையுடைய விலங்கு எதுவுமில்லை. உலகில் உள்ள மனிதர்களும் தங்களில் ஆற்றல் பொருந்திய இளைஞர் களைக் காளை என்று சொல்லியே புகழ்கின்றனர்.

காளைகளில் நல்ல வலிமையான கனமான உருவம் பெற்றவர்களாக இருப்பவர்களான நீங்கள், நீண்ட முகமும் நிமிர்ந்த அழகிய கொம்புகளும் பஞ்சு மூட்டை யைப் பரப்பி வைத்ததைப் போன்ற வடிவும், ஆண்மைத் தன்மையான தோற்றமும் வீரத்தின் அடையாளமாக உள்ள வாலும், வானத்தில் ஒலிக்கும் இடிபோன்ற ஓங்கி ஒலிக்கும் உந்தன் 'மா' என்ற உறுமல் ஒலியும், உன் முதுகின் மீது ஏதாவது சிறு பறவைகள் ஏறிவிட்டால் அதனை விரட்டிட உங்கள் வாலைச் சுழற்றி அடிக்கும் அழகும் இவை எல்லாவற்றையும் பல நாட்களாகப் பார்த்துப் பார்த்து உன்மேல் நான் அதீதக் காதல் கொண்டு விட்டேன்.

## குயில் தன் இழிந்த பிறப்பின் தன்மை உரைத்தல்

***பார வடிவும் பயிலும் உடல்வலியும்***
***தீர நடையும் சிறப்புமே இல்லாத***
***சல்லித் துளிப்பறவைச் சாதியிலே நான் பிறந்தேன்.***
***அல்லும் பகலும் நிதம் அற்ப வயிற்றினுக்கே***
***காடெல்லாம் சுற்றிவந்து, காற்றிலே எற்றுண்டு,***
***மூட மனிதர் முடை வயிற்றுக்(கு) ஓர் உணவாம்***
***சின்னக் குயிலின் சிறு குலத்திலே தோன்றி***
***என்ன பயன் பெற்றேன்? எனைப் போலோர்***
***பாவியுண்டோ? (29 - 36)***

**கருத்து :** பெருத்த கனமான வடிவமுடைய உடலில் வலிமையும் கெண்டு கம்பீரமான நடையும் உடையதான தன்மைகள் இல்லாத சிறப்பற்ற மிகச் சிறிய பறவை

சாதியிலே நான் பிறந்தேன். இரவு பகல் என்று பாராது இந்த வயிற்றுக்கான உணவினைத் தேடியலையும் அற்பமான நிலை என்னுடையது. காடெல்லாம் சுற்றி காற்றிலே தள்ளப்பட்டு, சில நேரங்களில் அறிவற்ற மனிதர்கள் சிலரின் மாமிச நாற்றம் பிடித்தவர்களின் வயிற்றுக்குள் உணவாகச் செல்கின்ற அவலமான குயிலின் குலத்தில் பிறந்து நான் எந்த ஒரு நல்ல பலனையும் பெறவில்லை. என்னைப் போலப் பாவப்பட்டவர் உலகில் யாருமில்லை.

## காதலின் இயல்பு

சேற்றிலே தாமரையும் சீழுடைய மீன் வயிற்றில்
போற்றும் ஒளிமுத்தும் புறப்படுதல் கேட்டிலிரோ?
நீசப் பிறப்பொருவர் நெஞ்சிலே தோன்றிவரும்
ஆசை தடுக்கவல்ல தாகுமோ? காமனுக்கே
சாதி பிறப்புத் தராதரங்கள் தோன்றிடுமோ?
வாதித்துப் பேச்சை வளர்த்தோர் பயனுமில்லை. (37 - 42)

**கருத்து :** சேற்றிலும் அழகிய தாமரை மலர்கின்றது. சீழ்பிடித்த தன்மையுடைய மீனின் வயிற்றிலிருந்தும் உயர்ந்த முத்து கிடைக்கின்றது என்று நாம் கேட்கின்றோம். ஆனால் இழிவான ஒருவனுடைய உள்ளத்தில் தோன்றி வளரும் காதலைத் தடுக்க வழி உள்ளதா? மன்மதன் சாதி, இனம், உயர்வு, தாழ்வு பார்த்துக் காதல் ஆசையை உண்டுபண்ணுவதில்லை. இனி வாதம் செய்து பேச்சை வளர்ப்பதனால் எந்தப் பயனும் இல்லை.

## காளைக்குக் குயில் உரைத்த காதல் வாக்குறுதிகள்

மூடமதியாலோ முன்னைத் தவத்தாலோ
ஆடவர்தம் முள்ளே அடியாள் உமைத் தெரிந்தேன்